# மின் நிலா

ஜூன் 8 - 2020 நிலா 003





engalblog.blogspot.com

========================================

"எங்கள் ப்ளாக்"
வலைப்பூவின்
வாராந்தர
வெளியீடு.

========================================

மின் நிலா பற்றிய
உங்கள் கருத்துகளை engalblog@gmail.com மின்னஞ்சலுக்கு அனுப்பவும்.

========================================

ஆசிரியர்கள் :

**B Sriram**
**K G Gouthaman**
**Kayjee**
**K G Y Raman**
**K S**

# உள்ளே ....

மிளகுஷியம் - சமையல் குறிப்பு : கீதா ரெங்கன் (பக்கம் 4)

வெண்ணையும் சுண்ணாம்பும் சிறுகதை - பரிவை சே குமார். (பக்கம் 11)

எங்கள் கேள்விகள் (பக்கம் 20)

ஆசிரியர்களின் உங்களுடன் அரட்டை. (பக்கம் 21)

இந்த வார சினிமாப் பாட்டு எங்கள் சாய்ஸ் - (பக்கம் 23)

பாசிடிவ் செய்திகள். (பக்கம் 31)

வெட்டுக்கிளி பற்றிய ரமா ஸ்ரீநிவாசன் கட்டுரை (பக்கம் 37)

:
: மறைந்த எழுத்தாளர், பதிவர் திரு பி எஸ் ரங்கநாதன் அவர்களுக்கு எங்கள் அஞ்சலி :: (பக்கம் 43)

கடுகு அவர்கள் நினைவாக "நெல்லைத்தமிழன்" அவர்கள் எழுதிய சிறுகதை "கொரோனாவால் வந்த லாபம்" (பக்கம் 46)

(பதிவுகளுக்கிடையில் உள்ள படங்கள் எடுத்தவர் : kayjee)

(அட்டைப் படம் : உதகை மலர்க்கண்காட்சி 2020 - படம் அனுப்பியவர் : K G விசுவேஸ்வரன் )

அட்டைப்படக் கேள்விக்கு பதில் : பக்கம் 19.



# மிளகுஷியம்

**கீதா ரெங்கன் அனுப்பிய சமையல் குறிப்பு**

**ஹாய் ஹாய் எபி கிச்சன் ரசிகப்பெருமக்கள் , பார்வையாளர்கள் எலோருக்கும் எங்கள் அன்பு வணக்கங்கள் . நோ கைகுலுக்கல் ! ஒன்லி கைகூப்பி வணக்கம் ! லாக் டவுன் தளர்த்தப்பட்டாலும் சோசியல் டிஸ்டன்ஸ் உண்டு . எனவே தனியே தன்னந்தனியே என்பதால் பாடிக் கொண்ட ஹிஹிஹி நம்ம் பாட்டெல்லாம் இங்க வராது . தனியே என்றாலும் அங்கே பாருங்க நம்ம பூசார் நான் மாஸ்க் போட்டுக்கொண்டு சமைக்கிறேனா என்று செக் செய்து கொண்டு ...லூட்டி ....மாஸ்க் போட்டா எப்படி பாட ..!!!**

பாரம்பரிய சமையல் குறிப்பு போடுங்கன்னு நெல்லை ரொம்ப நாளா ,சொல்லிக் கொண்டே இருக்கிறார் . எனக்கு டவுட்டு . கீதாக்கா சூப்பரா பாரம்பரிய சமையல் குறிப்புகள் போட்டுட்டு இருக்காங்க . அப்படி இருக்க நான் என்ன கொடுக்க முடியும்னு . அடுத்து பாரம்பரியம் என்று சொல்வதில் எங்கிருந்து இது தொடங்குகிறது என்று .

ஒரு காலத்தில் சமையலில் காரத்திற்கு மிளகுதான் பயன்படுத்தியிருக்கிறார்கள் . வற்றல் மிளகாய் , பச்சைமிளகாய் எல்லாம் அப்புறம் வந்த சமாச்சாரங்கள் என்றும் . நெய் , எள்ளு எண்ணை இவைதான் பழக்கத்தில் இருந்தன என்றும் பழைய கால /கல்வெட்டு சமையல் பற்றி ஆராய்ச்சி செய்த , மறைந்த சமையற்கலை நிபுணர் ஜேக்கப் சொல்லியிருந்ததாக நினைவு . ஒவ்வொரு காலகட்டத்திலும் மாற்றங்கள் வந்து கொண்டேதான் இருக்கும் போல .
என் அப்பா வழிப்பாட்டி இதையேதான் அடிக்கடி குறிப்பிடுவார் . அதாவது என் பாட்டியின் பாட்டி , பாட்டியின் அம்மா , அத்தை சித்தி சமைத்தது , அக்குறிப்புகள் எல்லாம் கண் பார்த்து , செவி வழி கேட்டுச் செய்ததால் - அதுவும் அவர் சித்தி , அம்மா எல்லாரும் சில உணவு , டிஃபன் எல்லாம் விலைக்கும் செய்து கொடுத்ததுண்டாம் - தன் சமையலிலும் கூட சில வித்தியாசங்கள் இருக்கலாம் என்றும் சொல்லுவார் .

பாட்டியின் வீட்டில் திவசத்தின் போது சமையலில் மிளகு மட்டுமே பயன்படுத்துவாங்களாம் . நெய்தானாம் . அப்புறம் மிளகு நல்லெண்ணை என்று ஆனதாம் . அப்புறம் உளுத்தம்பருப்பும் மிளகும் வறுத்து பொடி செய்து அப்படியும் சேர்ப்பதுண்டு என்று சொன்னார் . பின்னர் இதுதான் பின்பற்றப்பட்டது . இப்போது சிவப்பு மிளகாயும் , மிளகு , உளுத்தம்பருப்போடு சேர்க்கிறார்கள் . இதேதான் புகுந்த வீட்டிலும் . ஒரு சிலர் பச்சை மிளகாய் பயன்படுத்துவதைப் பார்த்திருக்கிறேன் .




**மிளகுஷியம் , மிளகுக்கூட்டு இரண்டும் கிட்டத்தட்ட ஒரே சுவைதான் என்று எங்கள் சிறு வயதில் நாங்கள் நினைத்ததுண்டு . ஆனால் சின்ன வித்தியாசம் உண்டு என்பதை நான் சமைக்கத் தொடங்கிய போது தெரிந்து கொண்டேன் . நாக்கில் சுவை பட்ஸ் நன்றாக இருந்தால் அந்த வித்தியாசம் தெரியும் .**

**சமையலில் ஒரே போன்று தோன்றும் உணவுவகைகளை சமையல் கில்லாடிகள் வித்தியாசத்துடன் செய்து அசத்த மாட்டார்களா என்ன !!!! சமையலில் மிளகுடன் உளுத்தம் பருப்பு சேர்த்து செஞ்சா ஒரு பெயர் , இல்லாம செஞ்சா ஒரு பெயர் , எப்படிச் செய்தாலும் இரண்டுமே ஒரே பெயர்தான்**

என்று சொல்லிச் செஞ்சாலும் சுவையாக இருந்தால் போதாதா .!!!!. அதனால இப்படித்தான் என்றில்லாமல் அவரவர் வீட்டு வழக்கத்தில் வரும் பெயர்கள் , ரெசிப் என்று சொல்லிக்கலாமோ .!!!

(ஸ்பாஆஆ கீதா இன்னா ஆராய்ச்சி ! இந்தாங்கோ பிடியுங்கோ எபிகிநோ பரிசு ! என்று... .யாரது ? ஆஆஆ பூஸார் ! (கீதாவின் மைன்ட் வாய்ஸ் : வாயில மாஸ்க் போட்டு இருங்கோ !!!!!! என்பதாக இருக்குமோ !!!!!!!ஹா ஹா ஹா ..



நம் வீட்டில் ஜுரம் என்றால் மிளகு ரசம் அல்லது மிளகு மட்டுமே சேர்த்த மிளகுஷியம்தான் . ஜுரம் தணியும் போது ..இந்த மிளகுஷியத்தின் வேரியேஷன்ஸ் இடம் பெறும் .

மிளகு + உளுத்தம்பருப்பு வறுத்துப் பொடி

மிளகு + உளுத்தம்பருப்பு வறுத்து + கொஞ்சம் தேங்காய் வைத்து அரைத்தல்

இந்த இரண்டிற்கும் நெய்யில் கடுகு கருகப்பிலையுடன் ஜீரகம் சேர்த்தோ சேர்க்காமலோ தாளிப்பு .

நம் வீட்டில் மிளகுக் கூட்டின் வேரியேஷன்ஸ் .

மிளகு + உளுத்தம்பருப்பு + மிளகாய் வற்றல் வறுத்துப் பொடி

மிளகு + உளுத்தம்பருப்பு + மிளகாய் வற்றல் வறுத்து + கொஞ்சம் தேங்காயுடன் அரைத்து

இந்த இரண்டிற்கும் ஜீரகம் சேர்த்து அரைத்தோ அல்லது தாளிப்புடன் ஜீரகம் சேர்த்தோ.
துவரம்பருப்பு + உளுத்தம்பருப்பு + மிளகு வறுத்து பொடி

துவரம்பருப்பு + உளுத்தம்பருப்பு + மிளகு வறுத்து + தேங்காய் கொஞ்சம் வைத்து அரைத்தல்

துவரம்பருப்பு + உளுத்தம்பருப்பு + மிளகு + மிளகாய் வற்றல் வறுத்து பொடி

துவரம்பருப்பு + உளுத்தம்பருப்பு + மிளகு + மிளகாய் வற்றல் வறுத்து + கொஞ்சம் தேங்காய்

இந்த நான்கிற்கும் சில சமயம் தாளிப்புடன் மட்டும் ஜீரகம்
இவை அனைத்தும் பாசிப் பருப்பு வேக வைத்துச் சேர்த்து அல்லது சேர்க்காமல். சிலப்போ பாசிப்பருப்பிற்குப் பதிலாகத் துவரம்பருப்பு.

காய்கள் : சௌசௌ, புடலை, கோஸ், அவரை, கோஸ் அண்ட் கேரட், கீரை, கீரைத்தண்டு. நம் வீட்டில் புடலங்காயுடன் அல்லது சௌ சௌவுடன் உருளைக் கிழங்கும் சேர்த்து மிளகுஷியம் அல்லது மிளகுக் கூட்டு செய்வதுண்டு. அதற்குப் பருப்பு போட்டோ போடாமலோ. தேங்காய் சேர்த்தோ சேர்க்காமலோ. நான் சுரைக்காயிலும் மிளகுஷியம், மிளகுக் கூட்டு செய்வதுண்டு.

அடுத்த திங்க பதிவில் சந்திக்கும் வரை எபி ஆசிரியர்கள் அனைவருக்கும் ப்ளஸ் வாசகர்கள், பார்வையாளர்கள் அனைவருக்கும் நன்றி கூறி விடை பெறும் எபி கிச்சன் குழு

Bhanumathy Venkateswaran 1 ஜூன், 2020 'அன்று' பிற்பகல் 1:27

ஆஹா! மிளகுஷியம்!மிகவும் எளிய, ருசியான கூட்டு. ஆனால் நான் தேங்காய்,பருப்பெல்லாம் போட மாட்டேன். அவையெல்லாம் சேர்த்தால் அது மிளகூட்டல் ஆகி விடாதா?(இந்த சந்தேகம் ஏற்கனவே நெல்லையாருக்கு வந்து விட்டது போலிருக்கிறது)

பதிலளி நீக்கு

▾ பதில்கள்

Thulasidharan V Thillaiakathu 1 ஜூன், 2020 'அன்று' பிற்பகல் 4:36

பானுக்கா மிளகுஷியம் பருப்பு, தேங்காய் இல்லாமதான் செய்வாங்க அது பத்தியம்....இப்படிச் செய்யும் போது எல்லாரும் சாப்பிட உகந்தபடி. அப்புறம் மிளகுக் கூட்டுக்கு பருப்பும் கூட வறுத்துப் போட்டுச் செய்வாங்க....இது எல்லாரும் சாப்பிட மிளகுஷியம்
அக்கா பெயர் தான் வித்தியாசம். மிளகூட்டல் என்றும் இதைச் சொல்லுவாங்க எங்க வீட்டுல.

மிக்க நன்றி பானுக்கா

கீதா



**என் வீட்டுத் தோட்டத்தில் பூவெல்லாம் கேட்டுப்பார் .....**

# வெண்ணையும் சுண்ணாம்பும் (சிறுகதை )

## பரிவை சே. குமார்

சேரில் அமர்ந்து பணத்தை எண்ணிக் கொண்டிருந்தார் கந்தசாமி . இன்று பத்திரம் போட இருக்கும் இடத்துக்காக மூத்தவன் முருகேசன் அனுப்பிய பெரும் தொகை அது என்பதால் திரும்பத் திரும்ப எண்ணிக் கொண்டிருந்தவரிடம் "எத்தனை தடவை எண்ணினாலும் அவன் எவ்வளவு அனுப்பினானோ அதுதானே இருக்கும் ?" என்றபடி அருகில் வந்தாள் வத்சலா .

"ஆமா ... இருந்தாலும் ஒரு தடவைக்கு நாலு தடவை எண்ணிப் பாக்குறது தப்பில்லையில்ல ..."

"தப்பில்லைதான் ... பேங்க்காரன் எண்ணாமலா கொடுத்தான் ...?"

"நக்கலு ... சரி ... சரி ... சாமிக்கு பூவெல்லாம் போட்டு தீபம் பத்த வச்சிட்டியா ... சாமி கும்பிட்டு ... சாப்பிட்டுக் கிளம்புறேன் ... உன் தம்பி ரங்குவ வரச்சொன்னேன் ..."

"ம் ... எல்லாம் பண்ணிட்டேன் ... போயி தீபம் பார்த்து சாமி

கும்பிட்டு வாங்க சாப்பிட ... இட்லி ரெடியா இருக்கு ..."

"ரங்கு இங்க வாறேன்னானா ... சாப்பிட வருவானா ..?"

"வர்றேன்னான் ... சாப்பிட்டு வர்றானா ... இல்லையான்னு தெரியாது ..." இட்லியில் கொஞ்சம் பிய்த்துக் காரச்சட்டினியில் முழ்கடித்து வாயில் வைத்த கந்தசாமியிடம் "ஏங்க ... இப்ப இடம்
வாங்குறப்போ அவங்ககிட்ட ரோட்டோரமா எதுனாச்சும் இடங்கிடந்தா சொல்லச் சொல்லுங்க ..."

ஏறிட்டுப் பார்த்தவர் , "எதுக்கு ..? கடைகிடை வைக்கப் போறியா ..?" எனக் கேட்டு விட்டுச் சிரித்தார் .

"இல்ல ... முருகேசன் நாலஞ்சி இடம் வாங்கிப் போட்டுட்டான் ... வீடு கட்டிட்டான் ... பாவம் பரமு ... இன்னமும் வாடகை வீட்டுலதான் இருக்கான் ... பெருசா எதுவும் சம்பாத்தியம் இல்லை ... ரெண்டு பொட்டப்புள்ளயள வேற வச்சிருக்கான் ..."

"அதுக்கு ..?"

"நாம கையில இருக்கதைப் போட்டாச்சும் அவனுக்கு ஒரு இடம் வாங்கிப் போட்டு வைக்கலாம்ங்க ..."

"நல்லாயிருக்கு கதை ... முருகேசன் நல்லாப் படிச்சி நல்ல வேலையில இருக்கான் ... இவுகதான் படிக்கலையே ... படிச்சிருந்தாத்தான் பெரியவனாட்டம் வசதி வாய்ப்போட இருந்திருக்கலாமே ... இனி அவனுக்கு இடம் வாங்கணும்ன்னு எம்முன்னால சொல்லிக்கிட்டு நிக்காதே ... பார்த்துக்க ...." கோபமானார் .

"இல்லங்க ... அது ... வந்து ..." மெல்ல இழுத்தாள் .

"சின்னவன் விஷயமா எங்கிட்ட ஒண்ணும் பேசாதே ... படிச்சித்தான் தொலையலைன்னாலும் பணங்காசு இருக்கவன் வீட்டுல பொண்ணெடுப்போம் அந்த வகையிலயாச்சும் நல்லா இருக்கட்டும்ன்னு பார்த்தா , இவரு அங்கயும் வில்லங்கம்தான் பேசுனாரு ... சுந்தரவல்லி அத்தை யாருமில்லாம நாலு பொண்ணுகளை வச்சிக்கிட்டு சிரமப்பட்டுக்கிட்டு இருக்கு ... அங்கதான் கட்டுவேன்னு என்னைய எதுத்துக்கிட்டு நின்னு ஒண்ணுமில்லாதவ வீட்டுல இருந்து ஒரு ஏப்புராசியக் கட்டிக்கிட்டு வந்துச்சு ... எங்கூடப் பொறந்தவ மேல எனக்கில்லாத அக்கறை இவனுக்கென்ன வந்துச்சு ... அந்த வீட்டுக்கு மூத்த மாப்பிள்ளை இவுக ... இவுக போயித்தான் மூணு பொட்டச்சிகளக் கரையேத்தியிருக்காக ... இவுகளால எனக்கென்ன ஆச்சு ... இப்ப

எம்புட்டுக் கடன் வாங்கி வச்சிருக்காகன்னு தெரியலை ... அதான் சனியன் தொலையட்டும்ன்னு அந்த வீட்டுக்கே புள்ளயா விட்டுட்டேனே ... இனி அவுகளுக்குச் சொத்துச் சேர்த்து நானென்ன பண்ணப் போறேன் ..." தட்டில் கை கழுவினார் .

"அவன எங்கயும் புள்ள விடலங்க ... நல்லது கெட்டது எல்லாத்துக்கும் அவன் இங்கதான் வந்து நிக்கிறான் ... நம்மளை விட்டுத் தள்ளிப் போகவும் இல்லை ... நம்மளைத் தள்ளி வைக்கவும் இல்லை ... நல்லா யோசிச்சிப் பேசுங்க ... மூணு பொட்டப்புள்ளய கரையேத்தியிருக்கான்னு சொன்னீங்களே ... அது மூணு இல்லங்க அஞ்சு ..."

"ஆமா அஞ்சு பொட்டப்புள்ளங்களைக் கரையேத்தியிருக்கான் ... அவனால எனக்கென்ன ஆச்சுன்னு கேட்டீங்களே ... நம்ம வீட்டு ரெண்டு பொட்டைக்கும் யார் செலவு பண்ணுனா ... பெரியவன் படிச்சிக்கிட்டு இருந்தான் ... உங்களுக்கும் சரியான வேலையில்லை ... அப்ப இவன்தானே வெளிநாட்டுல போயி வேலை பாத்துக் கரையேத்துனான் ... அவ்வளவு ஏன் ... பெரியவன் படிச்சிருக்கான் ... சம்பாதிக்கிறான்னு சொன்னீங்களே ... அவன் படிச்சதுக்கு செலவு பண்ணுனது யாருங்க ... நீங்க மட்டும்தானா ... சொல்லுங்க பார்ப்போம் ... இப்பவும் பெரியவன் அவனோட வாழ்க்கைக்கு எது தேவையோ அதுக்காக மட்டும்தான் உங்ககிட்ட வந்து நிக்கிறான் ... வேற என்ன பெரிசா நமக்கோ இல்ல கூடப்பொறந்ததுகளுக்கோ செஞ்சிட்டான்னு சொல்லுங்க பார்ப்போம் ... சின்னவன் கல்யாணத்துக்கு முன்னால கஷ்டப்பட்டு சம்பாதிச்சதையெல்லாம் எங்கே ... யாருக்காகச் செலவு பண்ணுனான் ..? கூடப் பொறந்ததுகளுக்காக இங்கதானே எல்லாத்தையும் போட்டான் ... இப்பவும் கூடப் பொறந்ததுக வீட்டுல நல்லது கெட்டதுன்னா அவன்தானே முன்னாடி நிக்கிறான் ... பெரியவன் இல்லையே ... இன்னைக்கி நெலமைக்கு பணங்காசு இல்லைன்னாலும் அவன்தாங்க பெரிய மனுசன் ..." கண் கலங்கினாள் .

"இந்தா நல்ல காரியத்துக்குப் போகும் போது கண்ணக் கசக்கிக்கிட்டு ... அவனே பெரிய மனுசனா இருந்துட்டுப் போவட்டும் ... சல்லிக்காசு அவனுக்காக செலவு பண்ண முடியாது ...

அம்புட்டுத்தான் ..."

"என்ன மச்சான் .... என்ன காலையிலயே சண்டை ...?" என்றபடி உள்ளே வந்தார் ரங்கசாமி .

"வா ரங்கு ... உம்பெரிய மாப்பிள்ளைக்கு இடம் வாங்கப் போறோம்ன்னதும் உங்கக்காவுக்குச் சின்னவுகளுக்கும் ஒரு இடம் வாங்கணும்ன்னு ஆசை வந்தாச்சு .... அதான் கண்ணக் கசக்குறாக ..."

"அதெப்படிக்கா ... முருகேசன் அவன் சம்பாத்தியத்துல வாங்குறான் ... இம்புட்டுப் பணம் போட்டு வாங்குற நிலமையிலயா பரமசிவம் இருக்கான் ...?"

"நீயும் பணத்துப் பக்கம்தான் பார்க்கிறே ... முருகேசன் படிக்க யார் காரணம் ...? பரமு பாசக்காரன்டா ... அதை ஏன் புரிஞ்சிக்க மாட்டேங்கிறீங்க ...?"

"அதுக்கு நம்ம கைல இருக்கிறதோட காடு கரையை வித்தாச்சும் இடம் வாங்கணும்ன்னு நிக்கிறாடா உங்கக்கா ..."

"புரியாமப் பேசாதக்கா ... சொத்துப்பத்தெல்லாம் ரெண்டு பேருக்கும் பொதுதான் ... அதுல கை வைக்க முடியாது ... சின்ன மாப்ளயால பணம் புரட்ட முடிஞ்சா வேலப்பனோட கொல்லையை வாங்கலாம் ... அவன் கொடுக்குறதாச் சொல்லிக்கிட்டு இருக்கான் .... முருகேசனுக்கிட்டதான் கேட்கச் சொல்றான் ... அதான் தீபாவளிக்கு குடும்பத்தோட வர்றாப்லயில்ல அப்பக் கேட்டுப் பார்க்கிறேன்னு சொல்லியிருக்கேன் ... அதை வேணுமின்னா பரமுக்கு கேட்கலாம் ... கொஞ்சம் அடிச்சிப் பேசி வாங்க முடியும் ..."

"ம் ... எம்மனசுல தோணுச்சு ... சொன்னேன் ... ஒரே குதியாக் குதிக்கிறாக ... நாளக்கி இவருக்கு முன்னால நாம்பொயிட்டாலும் யாரு இவரைப் பார்க்கிறாங்கிறதை நீயும் ஊரும் பாக்கத்தானே போறீங்க ... அன்னைக்கி பரமுதான் பார்ப்பான் ... ஏன்னா அவன்தான் காசு பணம்ன்னு அலையாத பாசக்காரன் ... அதெல்லாம் உங்களுக்குப் புரியாது ... நீங்கள்லாம் பணத்துக்குப் பின்னால

போறவங்க ... சரி .... சரி ... சாப்பிட வா ..."

"சாப்பிட்டுத்தான் வந்தேங்கா ..."

"அட ரெண்டு இட்லி சாப்பிடு ... வா ..."

"ஏய் ... தீபாவளிக்கு முருகேசன் குடும்பம் வருது ... எல்லாச் சாமானும் வாங்கணுமில்ல .... உன் தம்பிக்கு இட்லி வச்சிக்கிட்டே என்னென்ன வேணுமின்னு சொல்லு எழுதிக்கிறேன் ... சுப்பையாண்ணே கடையில சொல்லிட்டா அட்டப்பெட்டியில அழகாக் கட்டிக் கொடுத்திருவாங்க ... எதுக்கும் ரெண்டு கட்டப்பையை எடுத்துக் கொடு ... வேறெதுவும் வாங்கினா வச்சிக்கலாம்ல்ல ..."

ஐப்பசி மாசத்து மாலை மேக மூட்டமாய் இருந்தது .

"ஒரு வழியாப் பெரியவனுக்கு இடத்தை முடிச்சாச்சு ... வேலப்பனோட கொல்லை விபரத்தையும் மத்தியானம் பேசும் போது அவனுக்கிட்ட போன்ல சொன்னேன் ... தீபாவளிக்கு வரும்போது பேசலாம்ன்னு சொல்லிட்டான் ..."

காபியை உறிஞ்சியபடி கணக்கு எழுதிக் கொண்டே பேசினார் கந்தசாமி .
மளிகைச் சாமான்களை எடுத்து வைத்துக் கொண்டிருந்த வத்சலா "ஏங்க ரங்கு அதைப் பரமுக்குப் பேசலாம்ன்னு சொன்னானுல்ல ... அதுக்குள்ள எதுக்கு அவசரமா முருகேசனுக்குச் சொன்னீங்க ...?" என்றாள் .

"அட யாருடி இவ ... அம்புட்டுக்காசு அவனுக்கிட்ட ஏது ..? நல்ல கொல்லை வேற எவனும் வாங்குறதுக்குள்ள முருகேசன் பேசிட்டான்னா ... பின்னால அதுல என்ன வேணுமின்னாலும் செய்யலாம் ... இன்னைக்கு பள்ளிக்கூடம் , காலேசுன்னு பொட்டக்காட்டுல எல்லாம் கட்டிப்போட்டு கோடி கோடியாச் சம்பாதிக்கிறானுங்க ... அப்படி ஒரு தொழிலை ஆரம்பிச்சிட்டு இங்கிட்டு வந்து அவன் செட்டிலாகலாமுல்ல ... அவனும் எம்புட்டுக் காலத்துக்குத்தான் சிங்கப்பூர்லயே கிடக்குறது ?"

"எல்லாஞ் சரிதாங்க ... ஆனா முருகேசனைப் பத்தி யோசிக்கிற நீங்க ... பரமுவைப் பற்றிக் கவலையே படலையே அது ஏங்க ... முருகேசுக்குப் புள்ளைகளைப் படிக்க வைக்க , நல்ல வாழ்க்கை அமைச்சிக் கொடுக்கச் சொத்துச் சுகம் இருக்கு ... ஆனா பரமுக்கு ரெண்டு பொட்டப்புள்ளையும் படிக்க வச்சி , கட்டிக் கொடுக்கிற அளவுக்கு வசதி வாய்ப்பு

இல்லையேங்க .... நாம கை தூக்கி விடலைன்னா யார் அவனுகு உதவுவா ... எல்லாருக்கும் செஞ்சுதானிருக்கானே தவிர யார்க்கிட்டயும் இதுவரைக்கும் அவன் கைநீட்டி நின்னதில்லைங்க ... அப்படியே எம்மாமனார் மாதிரிங்க அவன் ... ஆனா நீங்க ..."

"மறுபடிக்கும் அவன் புராணம் பேசாதே ... ஆளை விடு ... அவனவன் தலையில விதிச்சதுதான் நடக்கும் .... மாத்தவா முடியும் ... இன்னும் மூணு நாள்ல மூத்தவன் வர்றான் ... ஏர்போர்ட் போகணும் ... பேரப்புள்ளையளுக்கு வேணுங்கிறதெல்லாம் வாங்கியாந்து வைக்கணும் ... அதுக முன்னாடி பட்டிக்காடு மாதிரி நடந்துக்காம டீசண்டா நடந்துக்கப் பாரு ... இதே பரமு புராணத்தை அவங்க முன்னாடியும் பாடிக்கிட்டு நிக்காதே ... புரியுதா ...?" கோபமாக பேசியபடி காப்பி டம்ளரை டக்கென வைத்தார் .

"அப்பா ... நாளைக்கு ஏர்போர்ட்டுக்கு மாமா காரெடுத்துக்கிட்டு வர்றேன்னு சொல்லிட்டாங்க ... உங்களத்தான் வரச்சொல்லியிருக்கேன்னு சொன்னேன் ... அவுக நான் வாறேன்னு சொல்றாங்க .... மறுக்க முடியலை ... அப்புறம் அங்க அத்தையும் மாமாவும்தானே இருக்காக ... அதான் இந்தத் தீபாவளி எங்க கூடத்தான்னு தீர்மானமாச் சொல்லிட்டாங்க ... அவங்க ஆசைப்படும் போது இல்லைன்னு சொல்ல முடியலை ... அதனால நாங்க அங்க போயிட்டு தீபாவளி கொண்டாடிட்டு ... தீபாவளிக்கு அடுத்தநாள் அங்க வாறோம் ... நாம அந்தக் கொல்ல விஷயமா வேலப்ப மாமாவைப் பார்த்துப் பேசுவோம் ... சரியாப்பா ...?" போனில் கேட்டான் முருகேசன் .

"என்னப்பா நீ... இங்க வருவீங்கன்னு எல்லாம் வாங்கி

வச்சிருக்கேன் ... அங்க போறேன்னு சொல்றே ... இங்க வந்துட்டு அப்புறம் போலாமே ..."

"அப்பா ... மகா மட்டுந்தானே அங்க ... அவங்களுக்கும் மக நம்ம வீட்டுல தீபாவளி கொண்டாடனும்ன்னு ஆசை இருக்காதா ... அதுவும் ரொம்ப வருசம் கழிச்சி எல்லாரும் வந்திருக்கோம் ... நம்ம வீட்டுலதான் அக்கா, தம்பியின்னு எல்லாரும் வருவாங்கதானே ... அது போக பசங்க ஏசி, வெஸ்டர்ன் டாய்லெட்டுன்னு பழகிட்டாங்கப்பா ... அதெல்லாம் அங்க இல்லையில்ல ... அதாம்ப்பா ... அடுத்த நாள் வரப் போறோம் .... பின்ன என்னப்பா ..."

"ம் ... சரிப்பா ... உன்னிஷ்டம் ..." என்றபடி போனை வைத்துவிட்டு மோட்டு வளையைப் பார்த்துப் பெருமூச்சொன்றை விட்டார்.

"சொல்லு பரமு ..." என்றபடி அடுப்படியில் இருந்து போன் பேசியபடி வெளியே வந்த வத்சலா வியர்வையைத் துடைத்தபடி அவருக்கு எதிரே அமர்ந்தாள்.

"ம் ...தீபாவளிக்கு ரெண்டு நாள் முன்னாடியே வாரீங்களா ... மளிகைச் சாமானா ... அதெல்லாம் அண்ணன் வர்றான்னு அப்பா நிறையவே வாங்கி வச்சிட்டாரு ... என்ன புதுடிரஸ்ஸா ... எங்களுக்கு எதுக்குப்பா அதெல்லாம் .... உங்களுக்கு நல்லதா வாங்கிக்கங்கப்பா ... ஆமா ... அக்கா வீடுலாம் வர்றேன்னுதான் சொல்லியிருக்காக ...

அண்ணனா ... அதான் சொன்னேனே ... வர்றேன்னுதான் சொல்லியிருக்கான் ... அப்பாவத்தான் ஏர்போர்ட்டுக்கு வரச் சொல்லியிருக்கான் ... சுப்ரமணியோட காரத்தான் சொல்லணும்ன்னு சொன்னாங்க .... ஆமா உங்கிட்ட பேசினானா ... இல்லையா .... சரி சரி ... நிறைய எதுவும் வாங்கித் தூக்கிட்டு வராதே ... என்னது ... ஆமா சின்னப்பத்தாதானே ... கெடக்கு .... தீபாவளியைத் தாண்டிரும் ... ரொம்ப மோசமாயில்லப்பா ... அதுக்கு ஒரு சேலையா ... எதுக்குப்பா ... அது கட்டவா போகுது ... ம் ... சரி ... சரி ... ஆசைப்படுறே .... வாங்கிட்டு வா .... நூல் சேலையாப் பார்த்து வாங்கு ... அது கட்டலைன்னாலும் உங்க சின்னத்தா கட்டிப்பாதானே .... சரிப்பா .... கேக்கணும்ன்னே நினைச்சேன்

**மறந்துட்டு என்னென்னவோ பேசிக்கிட்டு இருக்கேன் பாரு ... ஆமா என்ன கொணகொணன்னு பேசுறே .... ஊசி போடு ... ஊரெல்லாம் காய்ச்சலா இருக்கு ... ம் .... சரிப்பா ...**

**அப்பாவா ....வேலையா இருக்காருப்பா ..." என்றபடி போனை வைத்து விட்டு பெரியவனுக்கிட்ட பேசுனீங்களே ... என்ன சொன்னான் ...? எத்தனை மணிக்கு ஏர்போர்ட் வரச் சொன்னான் ..?" எனக் கேட்டாள் வத்சலா .**

**அவளின் கேள்விக்குப் பதில் சொல்லாமல் "என்ன பரமு எப்ப வர்றானாம் ..?" என அவளிடம் கேள்வி கேட்டார் .**

**"கேட்டதுக்குப் பதிலைக் காணோம் ... ம் ... எப்பவும் மொதநாள்தான் இழுத்து வந்து சேருவான் ... இந்தத் தடவை ரெண்டு நாள் முன்னாடி வர்றானாம் ..." முகமெல்லாம் சிரிப்போடு சொன்னாள் ..**

**"பேரப்புள்ளயளுக்கு எந்த வருசமும் டிரஸ் எடுத்துக் கொடுத்ததில்லை ... நாளைக்கு கடைக்குப் போயி அதுகளுக்கு நல்லதா டிரஸ் வாங்கிட்டு வருவோம் ... சரியா ..." என்றவரைப் புரியாமல் பார்த்தாள் வத்சலா .**

| |
|---|
| " அது சரி, அந்த அ ப செடியை ஏன் வீடுகளில் காண இயலாது ? " |
| "ஓஹோ ..... அதுவா<br><br>அது வந்து , அந்தச் செடி<br><br>poppy செடியாம் ..<br><br>அரசாங்க அனுமதி இன்றி பயிரிட்டால்<br><br>போலீஸ்காரங்க புடிச்சு ஜெயிலில் போட்டுடுவாங்களாம் . .<br><br>எங்கே ஓடுறீங்க ? "<br><br>"ஊட்டிக்கு ..... " |

(தகவல் அளித்தவர் : கே ஜி விசுவேஸ்வரன் . Retired Dy Director – Department of Horticulture & Plantation crops)

# எல்லோரும் பதில் சொல்லுங்கள் .

1) உங்கள் வாழ்க்கையில் , நீங்கள் பெரிதும் மதிக்கும் ஒரே ஒரு நபர் யார் ? ஏன் ? (ஒரே ஒரு நபரை மட்டும்தான் சொல்லலாம் )

2) முதல் கேள்விக்கு நீங்கள் சொல்லும் பதிலில் உள்ள அந்த நபர் , அதாவது நீங்கள் பெரிதும் மதிக்கும் நபர் , எங்கள் ப்ளாக் படிப்பவரா ?

3) மனிதர்களுக்கு இன்றியமையாத முக்கிய , அடிப்படை தேவைகள் : உண்ண உணவு , உடுக்க உடை , வசிக்க ஒரு வீடு . இவற்றிற்கு அடுத்தபடியாக ஒன்றைச் சொல்லவேண்டும் என்றால் , எதைச் சொல்வீர்கள் ? (ஒன்றை மட்டும்தான் சொல்லலாம் )

4) கோவில் , குளம் , ஆறு , கடல் , மேகக்கூட்டம் , யானை , இரயில் , குழந்தை - இவற்றில் எதைக் கண்டால் , உங்களுக்கு மனம் லேசாகி , காற்றில் பறப்பதுபோல இருக்கும் . (ஏதேனும் ஒன்றை மட்டும்தான் குறிப்பிடலாம் )

5) உங்களுக்குப் பிடிக்காத ஒரு விஷயத்தை , உங்களுக்குப் பிடித்த நபர் ஒருவர் செய்கிறார் என்று வைத்துக்கொள்வோம் . அந்த நிலையில் , நீங்கள் ..

அ) கண்டுக்காம விட்டுடுவீங்க ?

ஆ) இதெல்லாம் எனக்குப் பிடிக்காது என்று முகத்துக்கு நேரே சொல்வீர்கள் ?

இ) குறிப்பால் உங்கள் எண்ணத்தை உணர்த்த முயற்சி செய்வீர்கள் ?

**மின் நிலா வாசகர்கள் , இந்தக்கேள்விகளுக்கான பதில்களை , engalblog@gmail.com என்னும் மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும் .**

(ஏதேனும் ஒரு பொருள் பற்றி எழுதுங்க என்று ஆசிரியர் குழுவில் சொன்னேன் . உடனே ...... என்ன ஆச்சு என்றால் , எழுது பொருள் பற்றியே எழுதிவிட்டார்கள் !)

எழுது பொருள் பற்றி ..

முதலில் சிலேட்டு பல்பம்

சிலேட்டு என்னவோ முதலில் சட்டங்களுடன் வந்தாலும் குறை நாட்களிலேயே மொட்டை சிலேட்டு எனும் சட்டங்களுக்கு உட்படாத பொருள் ஆகிவிடும் . நீங்கள் சிலேட்டு சண்டை போட்டிருக்கிறீர்களோ ? சிவராமனுடன் ஒரு நாள் சண்டை போட்ட பின் தான் தெரிந்தது ..தகர சிலேட்டு என்று ஒன்று உண்டு என்று .

அடுத்து ---

பல்பம் , (சிலேட்டு )குச்சி , சிலேட்டு பென்சில் இப்படிப் பல்வேறு பெயர்களில் அறியப்பட்ட எழுதுகோல் , மற்றும் missile, பிட் coin, என் ? தின்பண்டம் கூட .

பலபங்கள் பலவகை !

சிலேட்டு செய்யும்போது வந்த துண்டுகள் முதல் , சுட்ட மண் , பால் குச்சி எனும் monochrome குச்சி முதல் , 4 quadrantilum ஒவ்வொரு வண்ணம் இருக்கும் colour குச்சி வரை பல வகைகளில் எழுதி ,உண்ட நினைவுகள் மறக்க முடியாதவை . நடுவில் வெள்ளை ,நீலம் என்று வண்ண chalk piece உம் உண்டு .

சாக்கட்டிகள் நம் சிற்பத்திறனைக் காட்டிக்கொள்ள பேருதவியாகத் திகழ்ந்தன .

ஐந்தாம் வகுப்பில் நான் படித்தபோது , சிலேட்டுக்குச்சி இல்லை என்றால் , சிகரெட்டுப் பெட்டி ஒன்றில் , ப்ளேடால் '*ப*' வடிவத்தில் கத்தரித்து , அதை மேல் நோக்கி திறக்கின்ற கதவு போல அமைத்து , பெட்டியில் சில படங்கள் வைப்போம் . இந்தப் படங்கள் வாரப் பத்திரிக்கைகளிலிருந்து வெட்டி எடுக்கப்பட்ட படமோ அல்லது தீப்பெட்டி மேல் ஒட்டப்படும் படங்களையோ உள்ளே அமைப்பேன் . அந்த திறக்கின்ற அட்டைக் கதவுக்கு ஒரு நூல் கட்டுவேன் . அந்த நூலை கீழ் நோக்கி இழுத்தால் , அட்டைக் கதவு மேலே திறக்கும் . உள்ளே இருக்கும் படம் தெரியும் .

(நாகை ) தேர்முட்டி ஸ்கூலில் , ஐந்தாம் வகுப்பிலிருந்து ஒரு படி இறங்கி வலது பக்கம் திரும்பி , கொஞ்ச தூரம் சென்றால் , இரண்டாம் வகுப்பு . அங்கே நான் செய்த பயாஸ்கோப் எடுத்துச் சென்று , (ஏமாந்த சில ) பையன்களைப் பிடித்து , " படம் பாக்க ஒரு குச்சி " என்று அனவுன்ஸ் செய்து , பார்க்க வருபவர்களிடம் ஆளுக்கு ஒரு குச்சி (குச்சி என்னும் பலப்பம் அவர்கள் கொடுப்பது ஓரங்குல நீளத்திலிருந்து , அதிக பட்சம் மூன்று அங்குலத்திற்குள் இருக்கும் ) வசூல் செய்து , படம் காட்டுவேன் . படத்தோடு ஒரு கதையையும் சொல்லுவேன் .

அப்படி வசூல் செய்த குச்சிகள் தீரும் வரை , அடுத்த படம் ரிலீஸ் செய்யமாட்டேன் !

# தோளிலே மாலையாய் ஆடும் ராஜா தாலேலோ ...

1980 இல் வெளிவந்த இந்தத் திரைப்படம் . ஹிட்ச்காக் திரைப்படமான சைக்கோவை பெருமளவு தழுவி எடுக்கப் பட்டிருந்தாலும் , 1978 இல் வெளியான ராஜேந்திர குமாரின் நாவலான 'இதுவும் விடுதலைதான் ' நாவலுக்குதான் க்ரெடிட் கொடுத்திருந்தார் பாலு மஹேந்திரா .

இதைத்தவிர 1963 இல் வெளியான The Collector என்னும் John Fowels எழுதிய நாவலிலுருந்தும் எடுத்தாளப்பட்டிருந்தது என்கிறார்கள் . சிகப்பு ரோஜாக்களும் , 100 வது நாளும் இதே போன்ற கதை அமைப்பு கொண்ட படங்கள் .




**அவரின் மூன்றாவது தமிழ்த் திரைப்படம் . மைக் மோகன் அப்போது கோகிலா மோகன் என்று அறியப்பட்டார் . அவர் ஒரு சிறு பாத்திரத்தில் இந்தப் படத்தில்தான் அறிமுகமானார் . பிரதாப் போத்தனும் மஹாலக்ஷ்மி மேனனும் முக்கிய பாத்திரத்தில் நடித்திருந்தார்கள் .**

**மஹாலக்ஷ்மி மேனன் ?**



அதுதான் ஷோபாவின் இயற்பெயர் ! பற்பல விருதுகளை மிக இளம் வயதிலேயே பெற்ற மிகத் திறமையான நடிகை , மிக

இளம் வயதிலேயே தன் இன்னுயிரை மாய்த்துக் கொண்டது ஒரு சோகம் . அதன் மர்மம் இன்று வரை தொடர்வது இன்னும் சோகம் . இதை வைத்து அப்புறம் சில திரைப்படங்கள் யூகங்களாக வந்தன . (லேகாயுண்டே மரணம் - ஒரு பிளாஷ்பேக் .) அந்தச் சிறு வயதுக்குள் எத்தனை எத்தனை படங்கள் .. விருதுகள் ...



பெருமளவு வரவேற்பைப் பெற்ற இந்தத் திரைப்படம் பாக்ஸ் ஆபீஸ் ஹிட் . 200 நாட்களையும் கடந்து ஓடி சாதனை படைத்தது .

இளையராஜாவின் 100 வது திரைப்படம் . பாலு மஹேந்திராவுடன் அவருக்கு முதல் படம் . அப்புறம் அவர் இசையில்தான் பாலுவின் படங்கள் யாவும் ! இந்தப் படத்தில் அவரது பின்னணி இசை , ரீ ரெக்கார்டிங் பாடல்கள் அத்தனையும் பாராட்டப்பட்டன .




இன்னொரு சுவாரஸ்யம் . ஏ ஆர் ரெஹ்மான் முதன்முதலில் தமிழ்த் திரை உலகில் கீபோர்ட் பிளேயராக அடி எடுத்து


வைத்த படம். அவர் பெயர் அப்போது திலீப். வயது 13. அதற்கு காரணம் ஏற்கெனவே கீபோர்ட் வாசித்துக் கொண்டிருந்தவர் குடித்து விட்டு வந்து கொண்டிருந்ததால் அவரை வெளியேற்றி விட்டாராம் இளையராஜா. சிந்துபைரவி நினைவுக்கு வருகிறதா ?!!

தன் மனைவிக்கு கச்சிதமான பாத்திரம் கொடுத்திருப்பதாகச் சொன்னாராம் பா ம. டைட்டிலில் ஷோபா மஹேந்திரன் என்றே போட்டார்களாம். இதுதான் அவர் தற்கொலை செய்து கொள்ளும் முன் கடைசியாக நடித்த திரைப்படம்.

ஷோபாவுக்கு பின்னனிக் குரல் கொடுத்தவர் (அனுராதா ராஜகிருஷ்ணா) அது சரியாகப் பொருந்துவதற்காக வேண்டி நிறைய நாட்கள் வெறும் வயிற்றில் இருந்தாராம் !

இந்தத் திரைப்படத்தில் மூன்று - சொல்லப்போனால் நான்கு - பாடல்கள். அதில் இரண்டை இங்கு பகிர்கிறேன்.

முதல் பாடல் கே ஜெ யேசுதாஸ் பாடிய புகழ்பெற்ற பாடல் நடபைரவி ராகத்தில் அமைந்த பாடலாம். இந்தப் படத்தின் இன்னொரு பாடலான பருவ காலங்களின் கனவு பாடலும் இதே ராகம்தானாம்.




பாலு இளையராஜாவிடம் காட்சியைச் சொல்லி பிரதாப் கிடாருடன் பாடுவதாக சொன்னவுடன் இளையராஜா முதலில் வாசித்துக் காட்டிய ட்யூன் "இளையநிலா பொழிகிறதே ". அது மஹேந்திராவுக்குப் பிடிக்காமல் போக இந்த ட்யூனை வாசித்துக் காட்டினாராம் .

பாடலை எழுதி இருப்பவர் கங்கை அமரன் .

**மின் நிலா :: ஜூன் 8, 2020**

**என் இனிய பொன் நிலாவே**
**பொன்நிலவில் என் கனாவே**
**நினைவிலே புது சுகம் த ர ர தா த தா**
**தொடருதே தினம் தினம் த ர ர தா த தா**

**என் இனிய பொன் நிலாவே**
**பொன்நிலவில் என் கனாவே**

**பன்னீரைத் தூவும் மழை**
**சில்லென்ற காற்றின் அலை**
**சேர்ந்தாடும் இந்நேரமே**

**என் நெஞ்சில் என்னென்னவோ**
**வண்ணங்கள் ஆடும் நிலை**
**என் ஆசை உன்னோரமே**

**வெந்நீல வானில்**
**அதில் என்னென்ன மேகம்**
**ஊர்கோலம் போகும்**
**அதன் உள்ளாடும் தாகம்**
**புரியாதோ என் எண்ணமே , அன்பே**

**என் இனிய பொன் நிலாவே**
**பொன்நிலவில் என் கனாவே ,**
**நினைவிலே புது சுகம் த ர ர தா த தா**
**தொடருதே தினம் தினம் த ர ர தா த தா**

என் இனிய பொன் நிலாவே

பொன்நிலவில் என் கனாவே

பொன்மாலை நேரங்களே

என் இன்ப ராகங்களே

பூவான கோலங்களே

**தென்காற்றின் இன்பங்களே**

**தேனாடும் ரோஜாக்களே**

**என்னென்ன ஜாலங்களே**

**கண்ணோடு தோன்றும்**

**சிறு கண்ணீரில் ஆடும்**

**கைசேரும் காலம்**

**அதை என் நெஞ்சம் தேடும்**

**இதுதானே என் ஆசைகள்**

**அன்பே ...**

**இரண்டாவது பாடல் உமா ரமணன் பாடியது . எழுதியது யார் என்று போடவில்லை என்பதால் எளிமையான அந்த இரண்டு வரிகளை இளையராஜாவே அமைத்திருக்கக்கூடும் . என்ன ஒரு மெலடி ... உமா ரமணன் குரலை அப்படியே இழைத்திருக்கிறார் . இந்தப் பாடலாலேயே பிரதாப் மேல் படம் பார்ப்பவர்களுக்கு ஒரு அனுதாபம் வந்துவிடும் .**

**ஆசை ராஜா தாலேலோ**

**அம்மா பொண்ணே தாலேலோ**


**தோளிலே மாலையாய்**

**ஆடும் ராஜா தாலேலோ ...**



# நிழலில்தான் வில்லன் !

1)சமூக சேவை செய்வதில் ஆர்வம் உள் சோனு சூட் , ஊரடங்கால் பாதிக்கப்பட்டுள்ள ஏழை தொழிலாளர்களுக்கு பல்வேறு உதவிகளை செய்து வருகிறார் . மஹாராஷ்டிரா , மத்திய பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களில் தினக் கூலிகளாக வேலை பார்த்து வந்த தொழிலாளர்கள் , அவர்களது சொந்த மாநிலங்களுக்கு செல்வதற்கு பஸ் வசதி ஏற்பாடு செய்து கொடுத்தார் . மேலும் , மும்பை உள்ளிட்ட நகரங்களில் வசித்து வரும் ஏழை தொழிலாளர்களுக்கு உணவு பொருட்களையும் வழங்கி வருகிறார் . சிறப்பு விமானத்தை வாடகைக்கு அமர்த்தி , அதில் , 167 தொழிலாளர்களையும் அழைத்து வர ஏற்பாடு செய்தார் . இதற்கான செலவு முழுவதையும் அவர் ஏற்றார் ....





**2) சிவகங்கையில் , யாசகம் பெறும் முதியவர் , கொரோனா நிவாரண நிதிக்காக , 5,000 ரூபாய் வழங்கினார் ..**



.

**3) இந்தியாவுக்குப் பெருமை சேர்க்கும் இந்தியப் பெண் ராணுவ மேஜர் சுமன் கவானி .**






**4)**

**இந்த வருடக் கடைசியில் தொட்டிலை ஆட்டுவார்களாம் .**
சீனாவில் தயாரிக்கப்பட்ட கொரோனா வைரஸ் தடுப்பூசி , இந்த ஆண்டு இறுதிக்குள் சந்தையில் கிடைக்கக்கூடும் என்று சீன அரசுக்கு சொந்தமான சொத்து மேற்பார்வை மற்றும் நிர்வாக ஆணையம் **(SASAC)** அந்நாட்டு சமூக ஊடகமான வீசாட்டில் தெரிவித்துள்ளது .



**5) இந்திய அளவில் இது பாஸிட்டிவ் செய்தி என்று சொல்லலாம் .**

**புதிய , வென்டிலேட்டர் கருவியை வடிவமைத்துள்ள நாசா , அதனை தயாரிப்பதற்கான லைசென்சை இந்திய நிறுவனங்களுக்கு வழங்கி உள்ளது .**






**6) கொரோனா ஊரடங்கால் தவிக்கும் எளியவர்களுக்கு உதவிட மகள் நேத்ரா படிப்பிற்காக சேமித்த ரூ. 5 லட்சத்திற்கு நிவாரணப் பொருட்கள் வழங்கிய மதுரை தாசில்தார்நகர் <u>சலூன் கடைகாரர் மோகனை</u> 'மன் கீ பாத்' நிகழ்ச்சியில் பிரதமர் மோடி பாராட்டினார்.**

**"இங்கு வசிக்கும் ஏழைகள் உதவி கேட்டனர். நானும் மனைவி பாண்டிச் செல்வியும் தயங்கினோம். 8 வது படிக்கும் மகள் நேத்ரா, "மக்களுக்கு உதவ வேண்டும்; இல்லை என்றால் சாப்பிட மாட்டேன். ஐ.ஏ.எஸ்., படித்து சம்பாதிப்பேன். என் படிப்பிற்காக சேமித்துள்ள ரூ.5 லட்சத்திற்கு நிவாரணம் வழங்குங்கள்," என்றாள்...."**


**ஜூன் ஐந்தாம் தேதி செய்தி :** பிரதமர் நரேந்திர மோடியில் பாராட்டப்பட்ட மதுரை சலூன் கடைக்காரர் மோகனின் மகள் நேத்ரா ஐ.நா-வின் நல்லெண்ணத் தூதராக அறிவிக்கப்பட்டுள்ளார்.



7) மக்களுக்காக ஏற்கெனவே 1,100 கோடி ரூபாய்க்கும் அதிகமாக செலவிட்டுள்ளது இன்ஃபோசிஸ் அறக்கட்டளை . சமூகத்தின் நலிந்த பிரிவைச் சேர்ந்த மக்களுக்கு மருத்துவமனைகள் , பள்ளிகள் , அனாதை இல்லங்கள் , மறுவாழ்வு மையங்கள் , 14,000-க்கும் மேற்பட்ட கழிப்பறைகள் , 60,000-க்கும் அதிகமான நூலகங்கள் போன்றவற்றை கட்டித் தந்திருக்கிறார் சுதா மூர்த்தி .



# வெட்டுக்கிளிகளின் விஷமத் தாண்டவம்



ரமா ஸ்ரீநிவாசன்

இந்த வெட்டுக்கிளிகளின் விஷமத் தாண்டவம் என்று, எப்போது துவங்கியது ?

முதன் முதலாக இவ்வெட்டுக்கிளிகள் 1926-1931/1932 வருடங்களில் நம் இந்திய நாடு ஆங்கிலேயரின் கையில் சிக்கிக் கொண்டிருந்தபோது தங்கள் கோரத் தாண்டவத்தால் நம் மண்ணைச் சூறையாடின .

இதையடுத்து, ஆங்கிலேய ஆட்சியின் கீழ் 1931 ல் பாலைவனவெட்டுக்கிளிகள் பற்றிய விரிவான ஆராய்ச்சி துவக்கப் பட்டது. இதையொட்டி 1939 ல் ஓர் நிலையான லோகஸ்ட் வார்னிங் அமைப்பு (LWO) கராச்சியில் ஒரு நிலையத்துடன் உருவாக்கப் பட்டது. அப்போது நாம் பிரிக்கப்படாத ஒன்றிணைந்த பாரதமாக இருந்தோம் என்பது குறிப்பிடத் தக்கது .

இவ்வமைப்பின் பணியே பாலைவன வெட்டுக்கிளிகள் மீது ஓர் கண் வைத்து, அதன் ஓர் முக்கியமான அடையாளம் காட்டப் பட்ட கிளைப் பிரிவு இனத்தை கண்காணிப்பதேயாகும் . ஏனெனில், கண் சிமிட்டும் நேரத்தில் இவ்வெட்டுக்கிளிகள் தார் பாலைவனத்திலிருந்து பறந்து வந்து நம் வயல்வெளி பயிர்களை சூறையாடி விடும் .

**1926-1931 களில் நிலமை மிகவும் மோசமாகப் போகவும், நம் நாட்டின் விடுதலைக்கும் பின், நம் அரசு ஜோத்பூர், ராஜஸ்தானில் ஓர் நிலையத்தை டைரக்டரேட் ஆஃப் பிளாண்ட் ப்ரொடெக்ஷன் குவாரன்டைன் அண்ட் ஸ்டோரேஜ் பிரிவில் விவசாயத் துறையின் கீழ் துவக்கியது.**

**இத்தொற்றின் தட்ப வெப்ப இணைப்பு என்ன என்பதை இப்போது பார்ப்போம்:**

**ஓர் வினோத முறையான வெப்பச் சூழல் இந்து மகா சமுத்திரத்தில் ஓர் குறிப்பிட்ட இடைவெளியில் ஏற்படுவதே இதன் தூண்டுதலாக இருக்கலாம் என்று நம்பப் படுகிறது**

**'இந்தியன் ஓவர்சீஸ் டிபோல்' என்னும் ஓர் நிகழ்வால் இந்துமகா சமுத்திரத்தின் கிழக்குப் பகுதிகளும் மேற்கு பகுதிகளும் வித்தியாசமாக வெப்பமாகின்றன. இதன் காரணமாக இந்தியாவிற்கும் மேற்காசிய கண்டத்திற்கும் அதிகப்படியான மழை கிடைக்கின்றது.**

**இந்த டிபோல் பாஸிடிவ்வாக இருக்கும்போது, மேற்கு பகுதிகள் கிழக்கு பகுதிகளைவிட வெப்பமாக இருக்கும். போன வருடம்தான் இந்த டிபோல் மிகப் பாஸிடிவ்வாகி இந்திய வட்டாரத்தில் ஒன்று அல்லது இரண்டு டிகிரிகள் கூடிய தட்ப வெப்ப நிலையை கொடுத்தது.**

**இந்த இந்து மகா சமுத்திர டிபோலின் தாக்கம் எவ்வளவு வலுவானதென்றால், அது நம் பயமான நீர் பஞ்சத்தையெல்லாம் பொய்யாக்கி 2019 ஜூன் மாதத்தில் வருடக் கணக்காக பார்த்திராத மழை கொட்டோ கொட்டென்று இந்தியா முழுவதும் கொட்டித் தீர்த்தது.**

**இத்தொடர் மழை மேற்கு ஆசியா, ஓமன், ஏமன், ஆப்பிரிக்காவின்எத்தியோப்பியா, சோமாலியா, கென்யா போன்ற இடங்களிலும் பெய்து தீர்த்தது. இதன் காரணமாக, அங்குள்ள வறண்ட மண் தண்ணீர் பதத்தை ஈர்த்து, இந்த வெட்டுக்கிளிகள் பெருக ஏதுவாகியது.**

இந்த டிபோல் 2018 ன் பின் வருடத்தில் தொடங்கினாலும் , அதன்பெருக்கம் 2019 ல் மேலும் அதிகரித்தது . சாதகமான காற்று வீச்சும் கூட சேர்ந்து இவ் வெட்டுக்கிளிகளை கூட்டம் கூட்டமாக இரானுக்கும் ,ஆப்கானிஸ்தானுக்கும் , பாகிஸ்தானுக்கும் கடைசியில் இந்தியாவிற்கும் செல்ல வசதி செய்தது . இதைக் கண்ட யுனைட்டட் நேஷனின் ஃபுட் அண்ட் அக்ரிகல்சரல் ஆர்கனைஸேசன் (FAO) எல்லோரையும் இதைப் பற்றி எச்சரிக்க முற்பட்டது .

இதையடுத்து , சோமாலிய நாடு தழுவிய எமெர்ஜென்ஸியை பிப்ரவரி 2020 ல் அறிவித்தது . அடுத்து ஏப்ரல் 2020 ல் பாகிஸ்தான் அதையே அறிவித்தது . இந்த வருடத்தின் எதிர்பார்க்காத சுமூகமான கோடைக்காலமும் மார்ச்சிலிருந்து மே வரை திடீர் திடீர் மழையும் இவ்வெட்டுக்கிளிகள் பெருக ஏதுவாக இருந்தன .

இது வரை ராஜஸ்தானிலும் மத்திய பிரதேசத்திலும் 50,000 ஹெக்டேர்கள் வெட்டுக்கிளிகளால் சீரழிக்கப் பட்டுள்ளன . இது தொடர்ந்து பருவ மழைக் காலத்தை தொடுமானால் அது மிகப் பெரிய விவசாய நாசத்தில் முடியும் .

இவ்வெட்டுக்கிளிகளின் கலியாட்டத்தை எவ்வாறு எதிர் கொள்வது ?

இதற்கு பூச்சிக் கொல்லி மருந்தும் பயிர் பாதுகாப்பு மருந்துகளும்அடித்து சிறிது வெற்றி கொள்ளலாம் . ஃபுட் அண்ட் அக்ரிகல்சரல் ஆர்கனைஷெஷன் (FAO)வின் மே 27 பரிந்துரைப்படி வளர்ந்த வெட்டுக்கிளிகள் குழுமங்களையும் சிறு திரள்களையும் பலுசிஸ்தான் மற்றும் சிஸ்டான் - பலுசிஸ்தான் தெற்கு கடற்கரையோரங்களிலும் பெருக்கிக் கொண்டிருக்கின்றன என்று அதிகாரபூர்வமாகத் தெரிய வருகின்றது . இத்திரள்கள் கூடிய விரைவில் கோலிஸ்தான் - தர்பர்கர் கோடைக் கால இனப் பெருக்க நிலங்களையடைந்து தன் நாசவேலையைத் துவங்கும் என்றும் எச்சரித்திருக்கின்றது .

இந்தியாவில் இவை கிழக்கு நோக்கி முன்னேறி மத்திய பிரதேசம்மற்றும் மஹாராஷ்டிராவின் கிழக்குப் பகுதிகளை நோக்கி பயணிக்கின்றன .

இப்பயணத்திற்கு ஏதுவாக இருந்தது அழுத்தமான மேற்கு நோக்கி வீசிய

“ஆம்ஃபன்” புயல்தான் . ஜூலை வரை இனியும் சில படையெடுப்புக்கள்ராஜஸ்தானிலிருந்து பீஹார் , ஒரிஸா வரை சென்று திரும்பி பருவ மழைக் காலத்தில் ராஜஸ்தான் வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது . இந்த போக்கு மெல்ல மெல்ல குறைந்து முடிவில் மறைந்துபோகும் என்று வல்லுனர்கள் கூறுகின்றனர் . இதில் நமக்கு என்ன நல்லசெய்தியென்றால் , இவை நேபால் , பங்களா தேஷ் மற்றும்தென்னிந்தியாவை பாதிக்காது என்பதுதான் .

போதுமான நடவடிக்கை எடுக்கப் படுகின்றதா ?

போன வருடமும் சரி இந்த வருடமும் சரி , பாகிஸ்தான் போதுமான அளவு பூச்சிக் கொல்லி பரவலாக உபயோகிக்காததனால்தான் இப்புதிய விஷக்கொல்லிக் கூட்டம் மேலும் பெருகுகின்றது என்று நம் இந்திய அதிகாரிகள் புகார் செய்கிறார்கள் .

வழி வழியான நெறிமுறையின்படி ஒவ்வொரு வருடமும் பாகிஸ்தான் மற்றும் இந்திய பூச்சியியல் வல்லுனர்கள் ஒன்று சேர்ந்து எல்லை பேச்சுவார்த்தை நடத்தி பூச்சிக் கொல்லி பொறுப்புகளை பகிர்ந்துகொள்வது வழக்கம் . குழப்பமிக்கப் பொருளாதார நிலை மற்றும் போதுமான அளவில்லாத கண்காணிப்பு ஆகியவை தொடர் பிரச்சினைகளாக விளங்கும் இச்சமயத்தில் புதிய கொரோனா நோய் தாக்கம் , இயற்கை சீற்றங்கள் மற்றும் வெட்டுக்கிளிகளின் விஷத்தாண்டவத்தின் மீதும் ஓர் அசாதாரண கவனத்தை ஏற்படுத்தியிருக்கின்றது .

இவ்வெட்டுக்கிளிகள் இங்கு உண்ண அதிக உணவில்லை என்பதால் நகர்புறத்தை பதம் பார்க்க மாட்டா என்பது ஒரு

புறம் இருந்தாலும் , நாடுமுழுவதும் பிரகடனப் படுத்தப்பட்ட ஊரடங்கானது பூச்சிக் கொல்லிகளின் இருப்பையும் அவையின் போக்குவரத்தையும் வெகுவாக பாதித்திருக்கின்றது .

தொழிலாளர்களின் எண்ணிக்கையும் குறைந்திருக்க , பூச்சிக் கொல்லிவேலைகள் முடங்கி , வெட்டுக்கிளிகளின் பெருக்கத்தை தடுக்க முடியாமல் அதன் கோரத் தாண்டவம் மேலும் அதிகரிக்கக் காரணமாகியிருக்கின்றது .

முன் அனுபவத்தின்படி ஆராய்ந்தால் , இவ்வகை வெட்டுக்கிளிகளின் விஷமம் ஒன்று அல்லது இரு வருடங்கள் நிலைத்து விட்டு பிறகு எட்டு அல்லது ஒன்பது வருடங்கள் தலை காட்டாமல் இருப்பது வழக்கம் . ஆயின் , அழுத்தமான இந்து மகா சமுத்திரத்தின் வெப்ப நிலைஏற்றத்தினால் டிபோல்ஸ் அதிகரித்து , வெட்டுக்கிளிகளின் விஷமம் குறிப்பிட்ட கால இடைவெளியில் திரும்பித் திரும்பி வருவது வழக்கமாகிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது .

இவ்வருட வெட்டுக்கிளிகளின் தாக்குதல் கடந்த இருபது வருடங்களில் காணாத மோசமான ஒன்று என்று வல்லுனர்களும் விவசாயிகளும் கூறுகின்றனர் .

ஒரு வல்லுனரின் கணக்குப் படி , சில கூட்டங்கள் **7-8** கி.மீ. நீளமும் **3-4** கி.மீ. அகலமும் கொண்டதாக இருந்தன . ஒரு சதுர கிலோ மீட்டர் **(sq.k.m.)** அளவு கொண்ட ஒரு கூட்டத்தில் **40- 80** மில்லியன் வெட்டுக்கிளிகள் இருக்கும் என்றும் இவை **35,000** மனிதர்கள் உண்ணும் உணவான பயிரைச் சீரழித்து விடும் என்றும் வல்லுனர்கள் கூறுகின்றனர் .

ஜூன் மாதம் இந்தியாவிற்கு இங்கிலாந்திலிருந்து கூடுதல்தெளிப்பான்கள் வரும் வரை , நம் நாடு ரசாயன தெளிப்பான்களை வைத்து சமாளிக்க வேண்டிய சூழலில் உள்ளது . ஓர் அரசதிகாரியின் கூற்றுப்படி , நம் அரசு ட்ரோன்கள் மூலம் பூச்சிக் கொல்லியை தெளிக்க முடிவெடுத்திருப்பதாகவும் தெரிய வருகிறது .

**கடைசியாக எப்போது இந்த தீவிர நோய் பரவல் நம் நாட்டைத் தாக்கியது ?**

**இதற்கு முன் பெருமளவில் பாதிப்பு மிக்க இந்த தீவிர நோய் பரவல் 2010 ல் ஏற்பட்டது . 1964 க்கும் 1997 க்கும் இடையே 13 வெட்டுக்கிளி தாக்கங்களை நம் நாடு சந்தித்திருக்கின்றது . 'லோகஸ்ட் வார்னிங்க் ஆர்கனைஷேஷன் ' பரிந்துரையின்படி 2010 முதல் 2018 வரை , பெரிதாகத் தாக்கத்தை ஏற்படுத்தும் அளவுக்கு இந்நோய் நம்மைத் தாக்கவில்லை .**

**ஆயின் , 2019 ல் குஜராத்தும் ராஜஸ்தானும் அதி வேகமாக பரவும்வெட்டுக்கிளி தாக்குதலைப் பற்றி அறிக்கை விட்டன . சுமார் 3.5 லட்சம் ஹெக்டேர் பரப்பிலுள்ள சீரகம் , ராப்ஸீட் மற்றும் கடுகு பயிர்கள் சீரழிந்து 1993 க்குப் பிறகு மிக மோசமான பயிரிழப்பை இரு மாநிலங்களும் எதிர்கொண்டன .**

**இன்றைய நிலமை என்னவென்றால் , இவ்விஷக் கிருமிகள் மத்தியப் பிரதேசத்திலிருந்து சட்டீஸ்கர் பறந்து செல்லும் வாய்ப்பு மிக அழுத்தமாக உள்ளது என்பதுதான் . எனவே , விவசாயிகளுக்கு இயற்கைவைத்தியங்களும் , பாரம்பரிய மாற்று வழிகளும் மற்றும் ரசாயன வழிமுறைகளும் பயிற்சியளிக்கப் பட்டுள்ளன .**

**விவசாயிகளின் வாழ்வாதாரமே சீரழியும் நிலையைப் பற்றிபடிப்பதற்கும் , காண்பதற்கும் மிகவும் வேதனையைத் தருகிறது . நமக்கு உண்ண உணவளிக்கும் விவசாயிகளுக்கு இயற்கை சீற்றத்தை எதிர்த்து எந்தக் காப்பீடுமில்லை என்று எண்ணும்போது பகீர் என்கிறது .**


**மத்திய மற்றும் மாநில அரசுகள் ஒருசேர அவர்களுக்குகந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்தால் , அவர்கள் நலனால் நாடு நலனாக இருக்கும் என்பதே என் பிரார்த்தனை .**

# எழுத்தாளர் கடுகு என்ற அகஸ்தியன் என்ற திரு .பி.எஸ் .ரங்கனாதன் அவர்கள் மறைவுக்கான இரங்கல்

## (நெல்லைத்தமிழன் )

இன்று (03/06/2020) காலை , கடுகு தாளிப்பு தளத்தில் (https://kadugu-agasthian.blogspot.com) இன்னும் புது இடுகை எதுவும் வரவில்லையே , கடுகு சார் உடல்நலம் முன்னேற்றமடைந்துவிட்டதா என்று கேட்டு அவர் தளத்தில் ஒரு பின்னூட்டம் இட்டேன் .. சில மணி நேரங்களில் எங்கள் பிளாக் ஸ்ரீராம் , வாட்சப் குழுமத்தில் , உடல் நிலை சரியில்லாமல் இருந்த திரு பி.எஸ் .ரங்கனாதன் (கடுகு சார் ) அவர்கள் நேற்று இரவு இறைவனடி சேர்ந்தார் எனத் தெரிவித்திருந்தார் . மனது 'அடடா ' என்று திடுக்கிட்டது . நமக்குத் தெரிந்த ஒருவரின் மறைவு ஏற்படுத்தும் வெறுமைதான் அது .





நான் நகைச்சுவைக் கதைகளை விரும்பிப் படிப்பேன் . கல்கி தீபாவளி மலர் மற்றும் மேகசின்களில் , 'கடுகு ' எழுதிய கதை வந்திருந்தால் , அதனையே முதலில் படிப்பேன் . எப்படியோ அவர் இணையதளத்தைப் படிக்கும் வாய்ப்பு சில

வருடங்களுக்கு முன்பு எனக்குக் கிடைத்தது. அவருடைய அனுபவங்கள், நண்பர்களைப் பற்றி அவர் எழுதிய கட்டுரைகள் போன்றவற்றைப் படித்து, 'கடுகு' என்ற எழுத்தாளருக்கு இப்படிப்பட்ட பலமான பின்னணி இருக்கா என்று வியப்பு ஏற்பட்டது. நான் அவருடைய நகைச்சுவை கதைகளின் ரசிகன் என்று அறிமுகப்படுத்திக்கொண்டேன். 'பாசுரங்களைப் பதம் பிரித்து வெளியிட்ட நாலாயிர திவ்யப் ப்ரபந்தம்' என்ற வைணவ நூல் மூலம் அவருடனான என் கடித (மெயில்) தொடர்பு தொடர்ந்தது.

அவரது நகைச்சுவைக் கட்டுரைகள், கதைகள், நாவல்கள் போன்றவை மட்டும் என்னைக் கவரவில்லை. மேலும் மேலும் புத்தகங்களைத் தேடிப் படிக்கவேண்டும், படித்தவற்றுள் தான் ரசித்தவற்றை தமிழ் மொழியில் சரளமாக எழுதி மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ளவேண்டும் என்ற அவரது தீராத வேட்கைதான் என்னைக் கவர்ந்தது. பழகுவதற்கு எளிமையானவர். பி.எஸ்.ரங்கநாதன் அவர்கள், டைரக்டர் ஸ்ரீதர், சித்ராலயா கோபு போன்றோரின் பால்யகால நண்பர், சோவின் தந்தை, கல்கி, குமுதம் எஸ்.ஏ.பி, கோபுலு போன்றோருடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர் என்பதே, அவர் அகால மரணமடையவில்லை என்பதைக் கூறும்.

அவரது படைப்புகளைப் பற்றியோ அல்லது அவரது பிராபல்யத்தைப் பற்றியோ நான் எழுதப்போவதில்லை. எழுத்தாளர்கள், நேரடியாக வாசகனுடன் பழகினால்தான், வாசகன் அவர்களை நினைவுகூர்வான் என்பதில்லை. எழுத்தாளன் அவனது படைப்புகளின் மூலமாக வாசகனுடன் நெருங்கிய உறவு கொண்டுவிடுகிறார்கள். அவர் இணையதளத்தில் கிட்டத்தட்ட பத்து ஆண்டுகளாக எழுதிக்கொண்டிருக்கிறார். அதைப் படித்த வாசகனாக, எனக்கு அவரின் மறைவு மனதுக்கு நெருங்கிய ஒருவரின் மறைவாக மனவருத்தம் தருகிறது.

நான் அவருடைய 'நாலாயிர திவ்யப்பிரபந்தம்' வெளியீட்டை பல தொகுதிகள் வாங்கியிருக்கிறேன். ஆனால், நாலாயிரம் புத்தகத்தில் அவர் கையெழுத்துடன் ஒன்று வாங்கிக்கொள்ளவேண்டும் என்று பிறகுதான் தோன்றியது. அவரிடம் எழுதிக் கேட்டதற்கு. அவர், அதனை அவருடைய அன்பளிப்பாகத்தான் தருவேன் என்று சொல்லியிருந்தார். விலையில்லாமல் வாங்கிக்கொள்ள என் மனம் இசையவில்லை. அவர் நினைவாக அப்படி ஒன்று வாங்கிக்கொண்டிருக்கலாமோ என இப்போது தோன்றுகிறது.

நிறைய புத்தகங்களைத் தேடிச் சென்று படிப்பது, சிறுவர்களுக்காக 'தாத்தா' என்ற ஹோதாவில் குருகுலம் என்ற சிறு பத்திரிகை மின்னூலாக அனுப்புவதற்காக தயார் செய்வது, இணையத்தில் எழுதுவது என்று அவர் சமீபம் வரை சுறுசுறுப்பாக இருந்தார். அவர் வைணவ பக்தி நூலான நாலாயிர திவ்யப் பிரபந்தந்திற்கு அர்த்தம் எழுத முனைந்திருந்தார்.

கிட்டத்தட்ட நாலில் ஒரு பங்கு வேலையை முடித்திருந்தார். அதை அவர் முடித்திருந்தால், நல்ல ஒரு உரை, வைணவர்களுக்குக் கிட்டியிருக்கும். ஆனால் அதற்கான அவகாசமும், உடலுரமும் அவருக்குக் கிட்டவில்லை என்றே தோன்றுகிறது.

பி.எஸ்.ரங்கநாதன் என்ற கடுகு சாரின் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கிறேன்.

அன்னாரின் மனைவி திருமதி கமலா ரங்கநாதன் அவர்களுக்கு இந்தச் சூழலைக் கடந்து செல்ல மன தைரியத்தைக் கொடுக்குமாறு ப்ரார்த்தித்துக்கொள்கிறேன்..

## எழுத்தாளர் கடுகு நினைவு

## சிறப்புச் சிறுகதை "கொரோனாவால் வந்த லாபம் "

எழுதியவர் : நெல்லைத்தமிழன்

நான் பத்திரிகை படிக்க ஆரம்பித்த காலங்களிலேயே எழுத்தாளர் 'கடுகு /அகஸ்தியன் ' கதை வந்திருந்தால் முதலில் அதைத்தான் படிப்பேன் . அவர் கதைகளுக்கான படங்களை ஓவியர் நடனம் அல்லது செல்லம் வரைந்திருந்ததாக நினைவு . அப்படிப்பட்ட நான் ரசித்த எழுத்தாளருடன் தொடர்பு கொள்ளும் வாய்ப்பு இணையத்தால் கிடைத்தது . ஒரு தடவை அவரிடமே , அவர் பாணியில் தொச்சு கதை எழுதப்போகிறேன் என்றேன் . அவர் , தாராளமாக எழுதுங்கள் என்றார் . அவரிடம் அப்போது சொல்லியிருந்த கதைக்கரு எனக்கு இப்போது நினைவில் இல்லை .

கடுகு -அகஸ்தியன் - திரு பி.எஸ் . ரங்கநாதன் அவர்களுடைய நினைவைப் போற்றும் விதமாகவும் , அஞ்சலி செலுத்தும் விதமாகவும் அவர் பாணியில் தொச்சு கதை எழுத முயன்றிருக்கிறேன்

# கொரோனாவால் வந்த லாபம்
# - நெல்லைத்தமிழன் -

கையில் காபியை எடுத்து தலைப்புச் செய்திகளைப் பார்க்க ஆரம்பித்த தட்சணம் , 'அத்திம்பேர் ... அத்திம்பேர் ' என்ற கூச்சல் வாசலிலிருந்து வந்தது . பூஜை வேளையில் கரடி என்றெல்லாம் சொல்லமுடியாது . எந்த வேளையிலும் கரடி இந்த தொச்சு என்று சொல்லத்தான் ஆசை . ஆனால் அப்படி நினைத்தாலே கமலாவுக்கு வியர்த்துவிடும் . அன்று முழுவதும் நேரிடையாக , மறைமுகமாக , நேரிடை மறைமுகமாக என்று

வித விதமாக ஏதேனும் புலம்பித் தள்ளிவிடுவாள் , என் அருமை மனைவி .

இப்போதெல்லாம் அழைப்பு மணியை அழுத்தக்கூட பொறுமை இல்லை போலிருக்கு இந்த தொச்சுவுக்கு . இனி பேப்பரைப் படித்த மாதிரிதான் .

"வா வா தொச்சு .... இப்போதான் நீ உன் வீட்டுக்குப் போன மாதிரி இருக்கு . அதுக்குள்ளே ஏன் வெளி வாசலிலிருந்தே என்னை ஏலம் போட்டுக்கொண்டு வர்றே ?"



கழுகுக்கு மூக்கில் வேர்க்கிறதோ இல்லையோ கமலாவுக்கு வேர்த்துவிடும் .

"உங்க அக்கா ஊரிலிருந்து கிளம்பி வரப்போறேன்னு ஒரு லெட்டர் போட்டாப் போதும் ... உடனே குடையும் கையுமாக

வாசலிலேயே உட்கார்ந்துகொண்டு , எப்போ வரப்போறா ..எப்போஓ வரப்போறா , எந்தன் கலி தீரன்னு காத்திண்டிருப்பேள் . என் தம்பின்னா மட்டும் இளக்காரம் . உங்களுக்குச் சேவை செஞ்சுண்டு தன் வீட்டைக் கூட கவனிக்காம , அத்திம்பேர் ..... அத்திம்பேர்னு காலைச் சுற்றிச் சுற்றி வந்தா , ஏன் இப்படி கரிச்சுக்கொட்ட மாட்டீங்க ? நானே , அடடா தொச்சு போய் மூணு நாளாயிடுத்தே ... இன்னும் வரக்காணோமே ...அங்கச்சியையும் காணோமே ... என்னாச்சுன்னு பரிதவிச்சுப் போயிருக்கேன் . நீங்க என்னடான்னா ''



வேலிக்கு ஓணான் சாட்சி என்பதுபோல , கதவுக்குப் பின்னாலிருந்து என் அருமை மாமியார் மெதுவாகக் கனைத்தாள் . ''ஏண்டீ காலைல மாப்பிள்ளையை ஏதேனும் சொல்ற ? அவருக்கு , அவர் ஆத்து மனுஷாதான் முக்கியமாப் படறது . நம்பாத்து மனுஷா , தேகம் ஒடிய சிச்ருஷை செய்தாலும் அலட்சியமாப் போயிடறது '' என்று சந்தடி சாக்கில் கந்தகப் பொடியை வைத்தார் . மாமியார் .

''அக்கா ..கொஞ்சம் சும்மா இருக்கயா ... அம்மா ...சும்மா இரு . என்னோட அத்திம்பேர்தானே .. அவர் என்னைச் சொல்றதுக்கு உரிமை இல்லையா என்ன ?'' டீப்பாயில் தொடாமல் வைத்திருந்த காபியை எடுத்து மடக் மடக் என்று குடித்தவாறே ..

''பாவம் ... நாம பேசினதுல அத்திம்பேரோட காபி ஆறிப்போயிடுத்து போலிருக்கு . அவருக்கு சூடா ஒரு கப் காபி போட்டு எடுத்துண்டுவாயேன் அக்கா ... அப்படியே எனக்கும் கொஞ்சூண்டு கொண்டுவா . இந்தக் காபி ஆறியிருந்ததால , காபி சாப்பிட்ட திருப்தியே இல்லை ''

தொச்சு கொஞ்சூண்டு என்று சொல்லிக்கொண்டே விரலை அரை அடி உயரத்துக்குக் காண்பித்ததிலேயே , அவனுடைய இந்த விசிட் அரை அடி டம்ளர் காபியோடு போகுமா இல்லை வேறு ஏதானும் எனக்குச் செலவு வைக்கும் பெரிய திட்டத்தோடு வந்திருக்கிறானா என்ற யோசனை வந்து என் வயித்தைக் கலக்க ஆரம்பித்தது .



அத்திம்பேர் .. சும்மா வேலை மெனெக்கெட்டு இப்போ நான் வரலை . காசு கொறச்சலா இருக்கேன்னு எப்போப் பார்த்தாலும் நம்ம அத்திம்பேர் கவலைப்படறாரே .. செலவழிக்க அஞ்சறாரே .. அத்திம்பேரிடம் லட்சக்கணக்குல பேங்குல காசு இருந்தா இப்படி கவலைப்படுவாரா ? சும்மா ஜாம் ஜாம்னு செலவழிச்சு நம்மைப்போல கலகலன்னு இருப்பாரேன்னு தோணித்து ''

''என்னை மாதிரி இளிச்சவாய் அத்திம்பேரும் , ஈஷிக்கொள்கிற அக்காவும் இருக்கும்போது உனக்கு கலகலன்னு இருக்கறதுக்கு என்ன கொறைச்சல் ? அடுத்தவன் காசில் மஞ்சக்குளிக்கிறவங்களுக்கு கவலை எங்கேர்ந்து வரும் ?'' என்று அவனிடம் உடனே சொல்லியிருப்பேன் என்றுதானே நீங்க நினைக்கறீங்க ? இல்லை இல்லை .. எப்போதும்போல மனசுக்குள்ளேயே நினைத்துக்கொண்டு வெளியே புன்னகைத்தேன் .

''என்னடா தொச்சு ..இப்போ என்ன புது ஐடியாவோட வந்திருக்க ?''

புது ஐடியாவோடு தொச்சு வந்திருக்கிறான் என்றதும் , மாமியார் கதவின் பின்னாலிருந்து காதை மட்டும் ஹாலுக்குள் நீட்டியது தெரிந்தது .

''இந்த பாருங்கோ அத்திம்பேர் .. எங்க தெருல ரெண்டு பேர் இப்படித்தான் .. காசு இல்லை , காசு இல்லைனு ரொம்ப கஞ்சத்தனமா இருந்தாங்க . அப்புறம் யாரோ சொல்லி , இந்த ஷேர் மார்கெட்ல அவங்க கிட்ட இருந்த பத்தாயிரம் ரூபாயை இன்க்வெஸ்ட் பண்ணாங்க . சும்மா ரெண்டு வருஷத்துல எங்கயோ போயிட்டாங்க ''

''அது இன்க்வெஸ்ட் இல்லை தொச்சு .. இன்வெஸ்ட் . நீ சொல்றதைப் பார்த்தால் ஏதோ கோர்ட் கேஸ்னுனா அர்த்தம் வருது ''

''தன்னாத்து மனுஷாள்கிட்ட எப்போவுமே உதவின்னு கேட்க நினைச்சாலே , அவாள் எல்லாம் உதவி கேட்கிறவர் பக்கமே தலைவச்சுப் படுக்க மாட்டா .. ஆனா இவர்ட்டேர்ந்து சுருட்டணும்னா மட்டும் நீலிக்கண்ணீர் வடிச்சுக்கிட்டு கடுதாசி போட்டுடுவா . மச்சினன் , நம்ம அத்திம்பேர் நன்னா இருக்கணுமேன்னு அல்லாடினா , எதையாவது சொல்லி அவனுக்கு இங்கிலீஸ் தெரியலைனு குத்திக் காண்பிக்கவேண்டியது . ஆண்டவன் , இப்படித்தாண்டீ உன்

வாழ்க்கைனு என் தலைல எழுதிவச்சுட்டான் " காபி டம்ளரோடு வந்த கமலா கடுகடுத்தாள் .

இன்னும் நான் ஏதும் சொல்லாமல் இருந்தால் , அவள் , டிசம்பர் சீசன் கச்சேரி போல , செஞ்சுருட்டியில் அழ ஆரம்பித்து , ஆரபி , பைரவி என்று ஆலாபனை பண்ண ஆரம்பித்துவிடுவாள் .

சிரித்த முகத்தோடு தொச்சுவைப் பார்த்து , "சொல்லு தொச்சு .. என்ன ஐடியாவோட இப்போ வந்திருக்கே ? உங்க தெரு ஆட்கள் எங்கேயோ போன மாதிரி என்னையும் எங்கேயோ அல்லாடவிடப் போறயா ? அப்புறம் கமலா சாப்பாட்டுக்கு என்ன பண்ணுவாள் ? உனக்கும்தான் எப்படிப் பொழுது போகும் ?"

"ஹா ஹா ஹா ... என்னதான் சொல்லுக்கா .. நகைச்சுவையா பேசறதுல அத்திம்பேரை அடிச்சுக்க ஆளே கிடையாது . அதனால்தான் நான் முந்தி , நீ முந்தினு அத்திம்பேர் கதை எழுதின உடனேயே பிரசுரிக்க பத்திரிகை ஆபீஸ்ல இருந்து ஓடோடி வந்துடறாங்க "

"அக்கா .. உன் கைமணம் நீ போடற காப்பிலயே தெரியறது .. ஆஹா .. அதுக்குள்ள தோசைக்கல் போட்ட வாசனை வர்றதே .. என்ன தோசை ? வெந்தய தோசையா ?" காபியை லபக்கிக்கொண்டே கொக்கி போட்டான் தொச்சு .

"நம்மாத்து மனுஷாள்லாம் சுருசியோட சம்ப்ரமா சாப்பிடறவா . கரெக்டா கண்டுபிடிச்சுட்டயேடா ... இவாள்ளாம் தட்டுல என்ன போட்டிருக்கு , எப்படிப் பண்ணியிருக்கா , பாராட்டுவோமேன்னு ஒரு அக்கறையும் கிடையாது . பேசாம பேப்பரைக் கைல வச்சிண்டு தட்டுல உள்ளதைச் சாப்பிடவேண்டியது . இல்லைனா டி.வி.ல போடற உகாண்டா நியூஸை ஏதோ பக்கத்துத் தெருவில் நடந்துட்டா மாதிரி வெறிச்சுன்னு பாத்துண்டிருக்கவேண்டியது "

"என்ன அக்கா இப்படிச் சொல்லிட்ட ? நீ மட்டும் பத்து நிமிஷம் முன்னாலேயே தோசைக்கல்லைப் போட்டிருந்தனா , தெரு

முனைல வரும்போதே எனக்குத் தெரிஞ்சிருக்கும் ... இது அக்கா பண்ணற வெந்தயத் தோசை வாசனைனு . பாவம் அங்கச்சிக்கும் , 'பப்ளி 'க்கும் நீ பண்ணற தோசைன்னா உசிர் . நான் போம்போது அவாளுக்கு மட்டும் ஒரு சின்ன டிபன் கேரியர்ல மிளாப்பொடி தடவி தோசை பத்துப் பன்னெண்டு கொடுத்துடு . எனக்கு கேரியர்ல வச்சுடாதே . நான் இங்கேயே சாப்டுட்டுப் போறேன் . இல்லைனா அத்திம்பேர் வருத்தப்படுவார் ''

ஓஹோ ...காலைல பல் தேச்ச உடனேயே சாப்பாட்டுக்கு இங்க வந்துட்டானா ? நல்லவேளை மூட்டை முடிச்சோட வரலையேன்னு பாத்தா , காலை டிபன் இங்கேர்ந்து அவாத்துக்கு கேரியர்ல போறதா ? இவன் சின்ன டிபன் கேரியர்னு சொன்னா அது எத்தனை பெருசுன்னு எனக்குத்தானே தெரியும் . பேஷ் பேஷ் என்று எப்போதும்போல மனதுக்குள் நினைத்துக்கொண்டேன் .
''அத்திம்பேர் ...ஒண்ணும் வேண்டாம் .. சும்மா பிசாத்து காசு ஒரு லட்சத்தை எடுத்து ஷேர் மார்க்கெட்ல இன்வெஸ்ட் பண்ணுங்கோ . ரெண்டே வருஷத்துல 20 லட்சமா ஆயிடும் . அப்புறம் புதுக்கார் வாங்கறதா இல்லை புது வீடே வாங்கறதான்னு உங்களுக்கு கன்ஃப்யூஷன் வருமே தவிர , அதை வாங்க காசு இருக்கா இதை வாங்க காசு இருக்கான்னு கவலையே வராது ''

ஏதோ ஒரு லட்சத்தை தரையில் கிடக்கிற காசு மாதிரி தொச்சு சொன்னதைக் கேட்டு விக்கித்துப் போனேன் . யார் தொச்சுகிட்ட சொல்லியிருப்பா , எனக்கு பேங்க் லோன் சாங்க்ஷன் ஆயிடுத்துன்னு ? கமலா கிட்ட , யார்ட்டயும் மூச்சு விடக்கூடாதுன்னு சொல்லியிருந்தேனே .... எப்போதும் போல , ''நீங்களும் யார்கிட்டயும் மூச்சு விட்டுடாதீங்கோ ''ன்னு ஊர் ஃபுல்லா எல்லார்கிட்டயும் சொல்லியிருப்பாளோ ?

''இந்த பாரு தொச்சு .. இந்த ஷேர் மார்க்கெட்லாம் ஏறும் ..இறங்கும் . பணம் வரும் , போகும் .. இதெல்லாம் சூதாடறது மாதிரி . நமக்கு அந்த பிஸினெஸெல்லாம்

வேண்டாம் . பேசாம , பேங்க்லயே காசு இருந்தா , கொஞ்சூண்டு வட்டி வந்தாலும் முதலுக்கு மோசம் வந்திடாது ''

கமலா சீறிக்கொண்டு வந்தாள் . ''ஒன்னோட அத்திம்பேர் நாலு காசு சம்பாதிச்சு ராஜா மாதிரி இருக்கணும்னு நீ அல்லாடறது அவருக்கு எங்க புரியுது தொச்சு . எனக்கென்னவோ விதி .. ஒரே குடிசைல வாழ்க்கை பூரா ஓட்டணும்னு . அதை விட்டா ஓட்டல் உடைசலான கார்ல வருஷத்துக்கு ரெண்டு தடவை அவர் அம்மா வீட்டுக்குக் கூட்டிண்டு போவார் . இந்தக் காசும் பேங்கிலேவா இருக்கும் ? பருந்துக்கு எலிக்குஞ்சு கண்ல படறமாதிரி அவர் அம்மாகிட்டேர்ந்து ''வீட்டுக் கூரை ஒழுகறது , சுவர் இடியறது ''ன்னு தாக்கல் வர ஆரம்பிச்சுடும் . இல்லை இருக்கவே இருக்கா அவர் அக்கா சரோஜா .... பத்து வரில பாராட்டி , சொந்தம் கொண்டாடி , தன்னோட கஷ்டங்களை ஒரு பாட்டம் சொல்லி அழுது செலவுக்கு பணம் கேட்க .. ம்ம்ஹூம் .ப்ச் ''

கமலாவை விட்டால் உடனே பிலாக்கணம் பாட ஆரம்பிச்சுடுவாள் . கூடவே அவள் அம்மாவும் அப்போ அப்போ தவில் வாசிக்க ஆரம்பித்தால் என் தலைதான் உருளும் . முதலில் உடனடி பிரச்சனையிலிருந்து விடுபடுவோம் என்ற ஞானோதயம் எனக்கு வந்தது .

''சரி தொச்சு ... ஷேர்ல இன்வெஸ்ட் பண்ண யார்கிட்ட கன்சல்ட் பண்ணணும்னு பார்க்கிறேன் . ஷேர் மார்க்கெட்டையும் விட்டு வைப்பானேன் . அதிலும் தொபுகடீர்னு குதிச்சுப் பாத்துடலாம் ''



"இது என்ன யாரோ எவரோன்னு தேடிண்டு போய் கன்சல்ட் பண்றது ? அத்திம்பேர் .. தொச்சா கொக்கா ?
நான் எல்லாத்துக்கும் சொலூஷனோடதான் வந்திருக்கேன் . எங்க தெருலயே பட்டாம்பி ஐயர்னு எக்ஸலெண்ட் இன்வெஸ்ட்மெண்ட் கன்சல்டண்ட் இருக்கார் . அவர் சொல்லி நாம ஷேர் வாங்கி , அவர் சொல்லும்போது வித்தா சுளையா 60%க்கு மேல லாபம் கிடைக்கிறதாம் . யார் யாரோ அவர் வீட்டுக்கு வந்து தவம் கிடக்கறா . அவர்ட்ட இன்னைக்கே பேசிடறேன் . இந்த வாரமே அவரைக் கூட்டிண்டு வந்துடறேன் . இன்வெஸ்ட் பண்ணறதுக்கு முதல்ல , எல்லாம் நல்லபடியா முடிஞ்சு அத்திம்பேர் கோடீஸ்வரராயிடணும்னு நாம எல்லாரும் அங்கச்சி பசங்களோட நம்ம குலதெய்வம் கோவிலுக்குப் போயி கும்பிட்டுட்டு வந்து இன்வெஸ்ட்மெண்டை ஆரம்பிச்சுடுவோம் . என்ன சொல்றீங்க ?"

அடப்பாவீ ... இவன் ஏதோ குடும்பத்தோட நேர்ந்துகொண்டதற்கு நம்ம செலவிலேயே குலதெய்வம் கோவிலுக்குப் போக ப்ளான் பண்றானே என்று மனதில் நினைத்துக்கொண்டேன் .

எங்க நான் பின்வாங்கிடுவேனோ என்ற பதட்டத்தில் கமலா பேச்சில் நுழைந்தாள் .

"என்ன யோசனை ? தொச்சு சொன்னா அது சூப்பர் ப்ளானாத்தான் இருக்கும் . அஞ்சு வருஷம் முன்னால கோவிலூர்ல ஒரு இடம் வாங்கிப்போட்டு பிறகு வித்து நமக்கு சுளையா எம்பதாயிரம் லாபம் வந்ததே .. தொச்சு ஃப்ரெண்ட் மூலமா தில்லிலேர்ந்து ஃபர்னீச்சரலாம் வரவழைச்சதுல நமக்கு பத்தாயிரம் ரூபாய் மிஞ்சித்தே " கமலா வாயெல்லாம் பல்லாகப் பேசினாள் . அவள் மறந்தும்கூட தொச்சு சொல்லி நஷ்டமானவைகளைப் பத்திப் பேச மாட்டாள் . ரெண்டு லாபம்னா எட்டு நஷ்டம் என்பது எனக்கு மட்டும்தானே நினைவிலிருக்கும் .

உரலுக்குள் தலையைக் கொடுத்தாகிவிட்டது ..இனி இடிக்குப் பயந்தால் ஆகுமா ?

"சரி ..பட்டாம்பியைக் கூட்டிண்டு வா . பேசி இன்வெஸ்ட் பண்ணிடுவோம் "

"அக்கா ..ஜோசியர் சொன்னாரோல்யோ ..அத்திம்பேருக்கு நல்ல காலம் ஆரம்பிச்சுடுச்சுன்னு . ஏதோ சின்னப் பையன் ..அணில் மாதிரி என்னாலான உதவி . நீயெல்லாம் பங்களால இருந்தா எனக்குத்தானே பெருமை . எங்க அக்கா பெரீய இடத்துல இருக்கா . புதுக்கார்லாம் வச்சிண்டிருக்கான்னு "

சரி .. தோசை ரெடியானா சொல்லு . எடுத்துண்டு கிளம்பறேன் . அங்கச்சி காத்துண்டிருப்பா .

**

என்ன ? தொச்சுவின் ஷேர் மார்க்கெட் யோசனையில் எவ்வளவு இன்வெஸ்ட் பண்ணினேன் , அதில் எத்தனை லாபம்னு தெரிஞ்சுக்க ஆசைப்படறேளா ?

தொச்சுட்ட சரின்னு சொல்லி , அவன் கன்சல்டண்டை கூட்டிக்கொண்டு வர்றதுக்குள்ள , கவர்மெண்டு திடுதிப்புனு ,

'கொரோனா ' என்ற பேரைச் சொல்லி ஊரடங்கு அனொன்ஸ் பண்ணிட்டாங்க . அப்புறம்தான் ஷேர் மார்க்கெட் டபக்குனு கீழ இறங்கி , அதுல இன்வெஸ்ட் பண்ணினவாளுக்கெல்லாம் லட்சம் நஷ்டம் , கோடி நஷ்டம்னு அவனவன் கதர்றானே ... ஆனானப்பட்ட வாரனுக்கே 50 பிலியன் டாலர் நஷ்டமாயிடுத்தாமே ... இனியும் ஷேரைப் பத்தி தொச்சு பேச்செடுப்பான்னு நீங்க நம்புறீங்க ?

எனக்கு தலைக்கு வந்த கத்தி தலைப்பாகையோட போயிடுத்துன்னு நானே நிம்மதிப் பெருமூச்சு விட்டுக்கொண்டு , வீட்டுக்குள்ளேயே நிம்மதியா பேப்பர் படிச்சுக்கிட்டு , சந்தை கிந்தை எங்கும் போகாமல் , தொச்சு கும்பலின் வரவு (அது எங்க ... அவா வந்தாலே செலவுதான் .. இது என் மனசு ) இல்லாமல் இந்த மூணு மாசமா அக்கடான்னு இருக்கேன் . இதுல ஷேர் மார்க்கெட் இன்வெஸ்ட்மெண்ட் என்னாச்சுன்னு தெரிஞ்சுக்க வந்திருக்கீங்களே .

=================

பின்குறிப்பு : கதைகளுக்கான படங்களை கடுகு சாரின் தளத்திலிருந்தே எடுத்திருக்கிறேன் . வரைந்த ஓவியர்களுக்கு நன்றி . ( நெல்லைத்தமிழன் )

**இந்த வார மின் நிலா பற்றிய உங்கள் கருத்துகளை ,**

**engalblog@gmail.com**

**என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பிவைக்கவும் .**

**நன்றி .**

**வணக்கம் .**

**"எங்கள் ப்ளாக் ஆசிரியர்கள் குழு "**



# உங்களைப்பற்றி நீங்கள் ...

வாரம் ஒரு வலைப்பதிவர் / வாசகர் என்ற தலைப்பில் , எங்கள் ப்ளாக் வாசகர்கள் எழுதுகின்ற வலைப்பூக்கள் பற்றி மின் நிலாவில் அடுத்த வாரத்திலிருந்து எழுத இருக்கிறோம் .

வலைப்பூவர்களும் , வலைப்பூவையர்களும் , வலைமொட்டுகளும் வாசகர்களும் தங்கள் பெயர் , வலைப்பூ பெயர் , வலைப்பூ சுட்டி ஆகிய விவரங்களுடன் , தங்கள் வலைப்பூவில் எந்த விஷயங்களுக்கு அவர்கள் முன் உரிமை கொடுத்து எழுதுகிறார்கள் , என்பதையும் , அவர்களை எழுத வைப்பது எது - அல்லது 'நான் ஏன் எழுதுகிறேன் ' என்ற தலைப்பில் அவர்களைப் பற்றிய ஒரு சுயபுராணமும் எழுதி , அதை

engalblog@gmail.com என்னும் மின்னஞ்சலுக்கு அனுப்பிவைக்கும்படிக் கேட்டுக்கொள்கிறோம் .

வலைப்பூ நடத்தாத எங்கள் ப்ளாக் வாசகர்கள் , அவர்களைப் பற்றியும் , அவர்களுடைய படிக்கும் ஆர்வம் மற்றும் எழுதும் ஆர்வம் குறித்தும் எழுதி அனுப்பலாம் .

எங்களுக்கு வந்து சேரும் அதே வரிசையில் , வாரம் ஒருவர் பற்றிய விவரங்களை வெளியிடுகிறோம் .

<u>எங்கள் ப்ளாக் ஆசிரியர்கள் குழு .</u>